# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2006
# அவுஸ்ரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்
**Tamil Competition - Australian Society of Graduate Tamils**

## தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் – 2006

அவுஸ்ரேலியாவின் நியூசவுத்வேல்ஸ், கன்பரா மாநிலங்களில் கடந்த 12 ஆண்டுகளாக நடாத்தப்பட்ட தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் 10 வது ஆண்டிலிருந்து **அவுஸ்ரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கத்தின்** தலைமையின் கீழ் நடாத்தப்பட்டு வருகின்றன. 2005ல் தவிர்க்க முடியாத காரணங்களால் போட்டிகள் நடைபெறவில்லை. இப்போட்டிகள் கருப்பொருள் ஒன்றினை மையமாக வைத்தே நடாத்தப்படுகின்றன. இக்கருப்பொருள், தமிழ் மொழி, தமிழ் கலாச்சாரம் சார்ந்தனவாகவும் ஏனைய பொது விடயங்கள் சம்பந்தமானவையாகவும் இருக்கும். இந்த வருடப் போட்டிகளுக்கான கருப்பொருள் **"மண்ணின் தாகம்" என்பதாகும்.** இப்போட்டிகள் பற்றிய விபரங்கள் கீழே தரபப்ட்டுள்ளன.

இந்த தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் சிட்னியிலும் மற்றைய அவுஸ்திரேலிய மாநிலங்களிலும் நாடாத்தப்படவிருக்கின்றன என்பதை பெருமையுடன் அறித்தருகின்றோம். இம்முறை எழுத்திறிவுப் போட்டிகளை அவுஸ்திரேலிய தேசிய மட்டத்தில் நடாத்த முயற்சிகள் எடுத்துவருக்கின்றோம். அடுத்துவரும் ஆண்டுகளில் வேறு பல போட்டிகளை தேசிய மட்டத்தில் நடாத்துவதற்கான முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதையும் உங்களுக்கு அறியத்தருகின்றோம். மாநில மட்டத்தில் நடைபெறும் போட்டிகளுக்கும் தேசிய மட்டத்தில் நடைபெறும் போட்டிகளுக்கும் வேறுவேறாக பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

## பிரதான குறிக்கோள்

தமிழ் ஊக்குவிப்புப் போட்டி நடத்தப்படுவதன் பிரதான குறிக்கோளானது: அவுஸ்ரேலியாவில் தமிழ்மொழியையும், தமிழ்க் கலாச்சாரத்தையும் பேணி வளர்ப்பதாகும்.

## நோக்கம்

அவுஸ்ரேலியாவில் வாழ்கின்ற தமிழ் சிறார்கள் தமிழ் கற்பதை தொடர்ந்து ஊக்குவிப்பது, அவர்களிடையே தமிழ்மொழி, தமிழ்க் கலாச்சாரம் ஆகியனவற்றில் ஆர்வம், பற்று, ஈடுபாடு ஏற்படுத்துவது மற்றும் இங்குள்ள தமிழ் இளைஞர்களிடையே நல்லதொரு தலைமைத்துவத்தை உருவாக்குவது போன்றவை எமது நோக்கமாகும்.

### பங்குபற்றுவறுகான தகுதிகளும் பொது விதிமுறைகளும்

1.1 தமிழ் கல்வி நிலையங்களில் தமிழ் கற்கும் மாணவர்கள் போட்டிகளில் பங்குபற்றுவதற்கான தமது விண்ணப்பங்களை அவர்களின் தமிழ்க் கல்வி நிலையங்களுக்கூடாக அனுப்புவது விரும்பத்தக்கது.

1.2 தமிழ் கல்வி நிலையங்களைச் சாராத மாணவர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தனிப்பட்ட முறையில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

2.1 கடந்த 2 ஆண்டுகளுக்குள், அவுஸ்ரேலியாவிற்கு இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் தமிழ் பேசும் நாடுகளில் இருந்து குடிபெயர்ந்தவர்கள் விசேட அதி உயர் போட்டிகளில் மட்டும் பங்குபற்ற முடியும். மேலதிக விபரங்களுக்கு இணைப்பாளருடன் தொடர்பு கொள்ளவும்.

2.2 இப்போட்டிகளில் 3 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்ட தமிழ் சிறார்களும் இளைஞர்களும் பங்குபற்றலாம்.

2.3 ஒரு போட்டியாளர் **ஏதாவது ஒரு போட்டியில் மாத்திரமே** பங்குபற்ற முடியும். ஆனால் அனைவரும் எழுத்தறிவுப் போட்டியிலும், வினாவிடைப் போட்டியிலும்(நடாத்தப்பட்டால்), விவாதப் போட்டியிலும் குழுவாகவும் **விசேட அதியுயர் திறமை எழுத்தறிவுப் போட்டியில் தனிப்பட்ட முறையிலும்** பங்குபற்றலாம்.

2.5 **பாடல் மனனப் போட்டி, வாய்மொழித் தொடர்பாற்றல், பேச்சுப் போட்டி, எழுத்தறிவுப் போட்டி** ஆகிய ஏதாவது ஒரு போட்டியில் எந்த வயதுப் பிரிவிலேனும் இறுதியாக 2004ம் ஆண்டு நடந்தேறிய போட்டிகளில் முதலாவது பரிசைப் பெற்ற போட்டியாளர் இந்த ஆண்டு **அதே [பாடல் மனனம், வாய்மொழித் தொடர்பாற்றல், பேச்சு, எழுத்தறிவு]** போட்டியில் எந்தப் பிரிவிலேனும் பங்குபற்றத் தகுதியுடையராகார். அவர்கள் தத்தமது வயதுப் பிரிவிற்குரிய வேறு போட்டிகளில் பங்குபற்றலாம்.

2.6 குறைந்த வயதுப் பிரிவினைச் சேர்ந்த போட்டியாளர்கள் அவர்களின் வயதுப் பிரிவிலும் கூடிய வயதுப் பிரிவினருக்கான போட்டிகளில் பங்குபற்ற அனுமதிக்கப்படலாம். ஆனால் கூடிய வயதுப் பிரிவினைச் சேர்ந்தோர் குறைந்த வயதுப் பிரிவினருக்கான போட்டிகளில் பங்குபற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.

2.7 இந்த வருடம் போட்டிகள் ஆனி தொடக்கம் ஆடி மாதம் [June - July 2006] வரைக்கும் நடைபெறும்.

2.8 2004 ஆம் ஆண்டுப் போட்டிகளில் சுழல் / வெற்றிக் கேடயங்கள் பெற்றவர்கள் 2006 இல் தத்தமது போட்டி நடைபெறும் தினத்தன்று கேடயங்களை ஒப்படைக்க வேண்டும். **இவ்வாறு கேடயங்களை ஒப்படைக்கத் தவறுபவர்கள் 2006 போட்டிகளில் பங்குபற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.**

2.9 விண்ணப்பித்த போட்டியாளர்கள் போட்டிகள் நடைபெறவுள்ள இடத்திற்குக் குறிப்பிட்ட திகதியில் போட்டி நடைபெறுவதற்கு 30 நிமிடங்களுக்கு முன்னர் வந்து தங்கள் பெயர்களை அங்குள்ள பொறுப்பாளர்களிடம் பதிவு செய்தல் வேண்டும். பதிவுசெய்த போட்டியாளர்கள் மாத்திரமே போட்டியில் பங்குபற்ற முடியும். போட்டி ஆரம்பித்த பின்னர் போட்டியாளர்கள் எவரும் போட்டிக்குப் பதிவு செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

2.10 போட்டியின் பெறுபேறு பற்றி நடுவர்கள் கூறும் தீர்ப்பே முடிவானதாகும்.

2.11 போட்டி நடைபெறும் இடம் நேரம் ஆகிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

2.12 மேடைப்போட்டிகளின் போது பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுவார்கள். ஆனால் பார்வையாளர் எவரேனும் போட்டிநடைபெறும்போது போட்டியாளருக்கு எந்தவகையிலும் உதவிசெய்தல் ஆகாது.

2.13 போதிய போட்டியாளர்கள் பங்குபற்றினால், ஆண்கள் / பெண்கள் பிரிவு என போட்டிகள் நடைபெறும். போட்டியாளர்கள் போட்டியில் பங்குபற்றும் வரிசைக்கிரமம் சீட்டிழுப்பின் மூலம் தீர்மானிக்கப்படும்.

2.14 போட்டியில் பங்குபற்றி வெற்றி பெறுவோருக்கு –
3–6 வயதிற்குட்பட்ட போட்டிகளில் பங்குபற்றும் அனைத்துப் போட்டியாளர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டு மிகச் சிறப்பாகத் தேர்ச்சிடையும் ஒருவருக்கு கேடயம் வழங்கப்படும்.
மற்றய வயதுப் பிரிவுகளுக்கு 1ஆம், 2ஆம், 3ம் பரிசுகளுடன் சிறப்புப் பரிசுகள் பின்வரும் அடிப்படையில் வழங்கப்படும்.
8–10 போட்டியாளர்கள் பங்குபற்றினால் – 2 சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும்.
10–15 போட்டியாளர்கள் பங்குபற்றினால் – 3 சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும்.
15 ற்கும் அதிகமான போட்டியாளர்கள் பங்குபற்றினால் 5 சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும்.

2.15 போட்டிகள் நடைபெறும் போது நடமாடும் தொலைபேசிப் பிரயோகம் தடைசெய்யப்பட்டுள்ளது. பெற்றோர் தத்தமது பிள்ளைகளின் போட்டியின் போது மட்டும் புகைப்படம், வீடியோ படம் எடுக்கலாம், ஆனால் மற்றய போட்டியாளர்களை புகைப்படம், வீடியோ படம் எடுத்தல் தடைசெய்யப்பட்டுள்ளது.

2.16 இப்போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் யாவும் 01–05–2006 இற்கு முன்னர் **Coordinator, Tamil Competition, PO Box 4040, NSW 2140** என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

2.17 வெற்றி பெறும் போட்டியாளர்களுக்கான பரிசில்கள் **தமிழ் அவுஸ்ரேலியா பட்டதாரிகள் சங்கத்தின் விழாவில்** வழங்கப்படும். மேடைப் போட்டிகளில் **80%** புள்ளிகளுக்கு மேல் பெற்று, முதலாவது இடத்தைப்பெற்ற திறமைமிக்க ஒரு வெற்றியாளர் மட்டும் மேடையில் தோன்றி தமது திறமையை வெளிப்படுத்த அனுமதிக்கப் படுவர். இதில் தமிழ் ஊக்குவிப்புப் போட்டிக் குழுவின் முடிவே இறுதியானது.

## 3.0 போட்டிக்கான நன்கொடை

3.1 இப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான கேடயங்கள் பல்வேறு தனிப்பட்டவர்களாலும் நிறுவனங்களாலும் வழங்கப்படுகின்ற போதிலும் போட்டி ஒழுங்குகளுக்கான செலவுகளின் ஒரு பகுதியை ஈடு செய்வதுடன் போட்டிகளை தொடர்ந்தும் எதிர்வரும் வருடங்களிலும் நடாத்துவதற்காகவும் பங்குபற்றும் **ஒவ்வொரு போட்டியாளாரிடமும்** இருந்து **$5.00** நன்கொடை பெறப்படும். போட்டி நடைபெறும் தினத்தன்று நன்கொடைக் கூப்பன்கள் வாங்குவதன் மூலம் இதை நீங்கள் செலுத்தலாம். ஓவ்வொரு போட்டியும் முடிவடையும் போது சேகரிக்கப்பட்ட தொகை அறிவிக்கப்படும்.

3.2 போட்டிகளில் பங்குபற்ற இருப்பவர்களுக்காக கோடை விடுமுறையின் போது ஒரு விளக்கப்பட்டறையும் நடக்கவிருக்கின்றது. விபரம் பின்னர் தரப்படும்.

## 4.0 வயதுப் பிரிவுகளும் போட்டிகளும்

எல்லாப் போட்டியாளர்களினதும் வயது **31–07–2005** அன்றுள்ளபடியே கணிக்கப்படும். போட்டியாளர்கள் பின்வரும் வயதுப் பிரிவுகளில் **ஒன்றில் மட்டுமே** பங்குபற்ற முடியும்.

4.1 **பாலர் பிரிவு -** 3 வயதிற்கும் 5 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் ( 01.08.2000 இற்கும் 31.07.2002 இற்கும் இடையில் பிறந்தோர்)

- பாடல் மனனப் போட்டி – 1

4.2 <u>ஆரம்பப் பிரிவு</u> – 5 வயதிற்கும் 6 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் ( 01.08.99 இற்கும் 31.07.2000 இற்கும் இடையில் பிறந்தோர்)

- பாடல் மனனப் போட்டி – 2
- வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி –2 (அடிப்படை தமிழ் உரையாடல் சம்பந்தமானதாக இருக்கும்)

4.3 **கீழ்ப் பிரிவு** –6 வயதிற்கும் 8 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் (01.08.97 இற்கும் 31.07.99 இற்கும் இடையில் பிறந்தோர்)

- பாடல் மனனப் போட்டி – 3
- வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி –3 (அடிப்படை தமிழ் உரையாடல் சம்பந்தமானதாக இருக்கும்)
- எழுத்தறிவுப் போட்டி – 3
  [கீழ்பிரிவிற்கான கேள்விகள் கீறிட்ட இடங்களை நிரப்புவனவாக அமைந்திருக்கும். இக்கேள்விகளுக்குத் தமிழ் மொழியிலுள்ள உயிரெழுத்துக்களும் 25 சிறிய சொற்களும் கொடுக்கப்படும். இப்போட்டி 30 நிமிடங்களைக் கொண்டதாக இருக்கும்.

4.4 **மத்திய பிரிவு** –8 வயதிற்கும் 10 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் (01.08.95 இற்கும் 31.07.97 இற்கும் இடையில் பிறந்தோர்)

- பாடல் மனனப் போட்டி – 4
- பேச்சுப் போட்டி – 4
- வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி –4
  [இப்போட்டி நாளாந்தம் வீட்டில் குடும்ப அங்கத்தினரிடையேயும் மற்றும் தமிழ்க் கல்வி நிலையங்களிலும் இடம்பெறக்கூடிய உரையாடல் சம்பந்தமானதாக அமைந்திருக்கும்.]
- எழுத்தறிவுப் போட்டி – 4
  [மத்தியபிரிவிற்கான கேள்விகள் கீறிட்ட இடங்களை நிரப்புவனவாக அமைந்திருக்கும். இக்கேள்விகளுக்குத் தமிழ் மொழியிலுள்ள உயிரெழுத்துக்களும் மெய் எழுத்துக்களும் 50 சொற்களும் கொடுக்கப்படும். இப்போட்டி 45 நிமிடங்களைக் கொண்டதாக இருக்கும்].

4.5 **மேற்பிரிவு** –10 வயதிற்கும் 13 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் (01.08.92 இற்கும் 31.07.95 இற்கும் இடையில் பிறந்தோர்)

- வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி –5
  [இப்போட்டி நாளாந்தம் வீட்டில் குடும்ப அங்கத்தினருக்கிடையேயும், தமிழ் கல்வி நிலையங்கள் மற்றும் தமிழ் சமூகத்தினரின் திருமணங்கள், தமிழ் கலாசார நிகழ்ச்சிகள் போன்ற வைபவங்களில் இடம்பெறக்கூடிய உரையாடல் சம்பந்தமானதாக அமைந்திருக்கும்].
- எழுத்தறிவுப் போட்டி – 5
  [மேற்பிரிவிற்கான போட்டிகள் NSW தமிழ் பாடசாலைகள் பாடத்திட்டத்திற்கமைய நடாத்தப்படும்].
- பேச்சுப் போட்டி –5
  [மேற்பிரிவிற்குப் பேச்சுக்கள் எழுதிக்கொடுக்கப்படும். போட்டியாளர் தமக்குக் கொடுக்கப்படும் பேச்சினை மனனஞ் செய்து கூறல் வேண்டும்].

4.6 **அதிமேற்பிரிவு**– 13 வயதிற்கும் 18 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் (01.08.87 இற்கும் 31.07.92 இற்கும் இடையில் பிறந்தோர்)- போதியளவு விண்ணப்பங்கள் கிடைத்தால் 13–15, 15–18 பிரிவாக நடைபெறும்.

- எழுத்தறிவுப் போட்டி 6
  இந்த அதிமேற்பிரிவிற்கான எழுத்தறிவுப் போட்டிகள் NSW தமிழ்ப் பாடசாலைகள் பாடத்திட்டத்திற்கேற்ப நடைபெறும் அத்துடன் 10 சொற்கள் சொல்வதெழுதல் தரப்படும்].

- பேச்சுப் போட்டி – 6
  [அதிமேற்பிரிவிற்குப் பேச்சுப் போட்டிக்கான தலைப்பு மாத்திரமே கொடுக்கப்படும். போட்டியாளர்கள் பேச்சினைத் தாங்களே தயாரித்து மனனஞ் செய்து பேச வேண்டும். எழுத்துப் பிரதியைப் பார்த்து வாசித்தல் தவிர்க்கப்பட வேண்டும். ஒவ்வோரு போட்டியாளருக்கும் 5 நிமிடங்கள் கொடுக்கப்படும். போட்டியாளரின் முகவுரை சுருக்கமானதாக அமையவேண்டும். மேற்குறிப்பிட்ட வயதுப்பிரிவுக்குட்பட்ட, தகுதியுடைய போட்டியாளர்கள் இப்போட்டியில் பங்குபற்றலாம்]
  வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி –6
  [இப்போட்டி நாளாந்தம் வீட்டில் குடும்ப அங்கத்தினருக்கிடையேயும், தமிழ் கல்வி நிலையங்கள் மற்றும் தமிழ் சமூகத்தினின் திருமணங்கள், தமிழ் கலாசார நிகழ்ச்சிகள் ஒன்றுகூடல் போன்ற வைபவங்களில் இடம்பெறக்கூடிய உரையாடல்கள் உலகத் தமிழ் சமுதாயம் சம்பந்தமானதாக அமைந்திருக்கும்].
- விவாதப் போட்டி 6

4.7 **இளைஞர் பிரிவு** – 18 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் (01.08.75இற்கும் 31.07.87 இற்கும் இடையில் பிறந்தோர்).

- பேச்சுப் போட்டி –7
  இளைஞர் பிரிவிற்கு பேச்சுப் போட்டிக்கான தலைப்பு மாத்திரமே கொடுக்கப்படும். போட்டியாளர்கள் பேச்சினைத் தாங்களே தயாரித்து மனனஞ் செய்து பேச வேண்டும்.
- விவாதப் போட்டி 7

## 5.0 பாடல் மனனப் போட்டிகள்

5.1 போட்டிகளுக்கெனச் சிறுவர்களுக்கான பாடல்கள் கொடுக்கப்படும். போட்டியின் போது உச்சரிப்பு**(30),** மனனஞ் செய்யும் திறமை ( 15), பொருளுணர்ந்து கூறுதல் (25), சபை மரபும் ஆதிக்கமும் (30), ஆகியன கவனிக்கப்படும். போட்டியாளரின் முகவுரை சுருக்கமானதாக அமையவேண்டும்.

பாடல் மனனப் போட்டி போட்டி –1, 2

5.2 போட்டிக்குக் கொடுக்கப்படும் பாடல்களை மனனஞ் செய்து கூறல் வேண்டும். ஆனால் அவற்றின் பொருளைக் கூறவேண்டியதில்லை. ஒவ்வொரு போட்டியாளருக்கும் 3 நிமிடங்கள் மாத்திரமே கொடுக்கப்படும்.

பாடல் மனனப் போட்டி போட்டி –3

5.3 போட்டிக்கென பாடல் கொடுக்கப்படும். பாடல்களை மனனஞ் செய்து கூறல் வேண்டும். அவற்றின் பொருளைக் கூறவேண்டியதில்லை. ஒவ்வொரு போட்டியாளருக்கும் 4 நிமிடங்கள் மாத்திரமே கொடுக்கப்படும்.

பாடல் மனனப் போட்டி போட்டி –4

5.4 போட்டிக்கென கொடுக்கப்படும் பாடலை மனனஞ் செய்து கூறல் வேண்டும். ஒவ்வொரு போட்டியாளருக்கும் 5 நிமிடங்கள் மாத்திரமே கொடுக்கப்படும்.

## 6.0 வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி

6.1 இப்போட்டிகள் வயதுப்பிரிவுகளில் கூறியவாறு நடாத்தப்படும். இவ்வுரையாடல் சுமார் பத்து நிமிடங்களுக்கு இடம்பெறும்.

6.2 போட்டியின் போது உச்சரிப்பு**(20)**, சொற்பிரயோகம் **(20)** உரையாடும் திறன் **(50)**, உரையாடலில் பங்குபற்றும் நிலை **(10)** ஆகியன கவனிக்கப்படும்.

## 7.0 எழுத்தறிவுப் போட்டி

இப்போட்டிகள் வயதுப்பிரிவுகளில் கூறியவாறு நடாத்தப்படும். [ விதி 4 ஐ பார்க்கவும்]

## 8.0 பேச்சுப் போட்டி

8.1 மத்திய பிரிவிற்கு பேச்சு எழுதிக்கொடுக்கப்படும். போட்டியாளர் தமக்குக் கொடுக்கப்படும் பேச்சினை மனனஞ் செய்து 5 நிமிடங்களுக்குள் கூறல் வேண்டும். எழுத்துப் பிரதியைப் பார்த்து வாசித்தல் தவிர்க்கப்படல் வேண்டும். எழுத்துப்பிரதியைப் பார்த்து வாசித்தால் புள்ளிகள் குறைக்கப்படும்.

8.2 போட்டியின் போது உச்சரிப்பு **(30),** மனனஞ்செய்தல் **(10),** பேச்சுத்திறமை **(20),** பொருளுணர்ந்து பேசுதல்**(20),** சபைமரபும் ஆதிக்கமும் **(20)** ஆகியன கவனிக்கப்படும்.

## 9.0 விவாதப் போட்டி

9.1 போதிய குழுக்கள் விண்ணப்பிக்கும் பட்சத்தில் போட்டிகள் அரை இறுதிப் போட்டி இறுதிப் போட்டி என்ற இருநிலைகளில் இடம் பெறும்.

9.2 போட்டிக்கான தலைப்புக்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

9.3 இப்போட்டியில் மேற்குறிப்பிட்ட வயதுப்பிரிவுக்குட்பட்ட தகுதியுடைய போட்டியாளர்கள் மும்மூன்று போட்டியாளர்களைக் கொண்ட குழுக்களாக விண்ணப்பிக்க வேண்டும்.

9.4 போட்டியாளர்கள் விவாதத்தின் போது துணைக்குறிப்புகளைப் பயன்படுத்தலாம். ஆனால் தமது விவாதத்தினை எழுத்துப் பிரதியிலிருந்து வாசிக்கக் கூடாது. எழுத்துப் பிரதியிலிருந்து வாசிக்கும் போட்டியாளர்களுக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.

9.5 விவாதக் குழுவினைச் சேர்ந்த ஒவ்வொருவருக்கும் தனித் தனியே 5 நிமிடங்கள் கொடுக்கப்படும். 5 நிமிடங்கள் முடிந்ததும் மணி ஒருமுறை அடிக்கப்படும். தொடர்ந்து அவர் பேசினால் 30 வினாடிகளுக்குப் பின் மணி இரு முறை அடிக்கப்படும். இரண்டாவது மணி அடித்தவுடன் அவர் பேச்சை நிறுத்த வேண்டும்.
விவாதக் குழவின் தலைவர்கள் ஒவ்வொருவருக்கும் விவாதத்தினை முடித்து தொகுப்புரை வழங்குவதற்கு 3 நிமிடங்கள் கொடுக்கப்படும். ஆதரித்துப் பேசும் குழுவின் தலைவர் விவாதத்தை முடித்து வைப்பார்.

9.6 விவாதத்தில் என்னென்ன அம்சங்கள் கவனிக்கப்படும், எப்படிப் புள்ளிகள் வழங்கப்படும் என்பன பற்றிய விபரங்கள் குழுக்களுக்கு பின்னர் தரப்படும்.

9.7 விவாதக் குழுக்கள் எந்தெந்தத் தரப்பில் வாதிடுவர் என்பது சீட்டிழுப்பின் மூலம் தீர்மானிக்கப்படும்.

9.8 அரை இறுதிப் போட்டிகள் மூலம் இறுதிப்போட்டிக்கு பங்குபற்றத் தகுதி உடைய குழுக்கள் தேர்ந்தெடுக்கப்படும். அரை இறுதிப் போட்டி முடிவடைந்ததும் இறுதிப் போட்டிக்கான தலைப்புக் கொடுக்கப்படுவதுடன் விவாதத்தை ஆதரித்து, எதிர்த்து பேசுவதற்கான ஒழுங்கு சீட்டிழுப்பின் மூலம் தீர்மானிக்கப்படும்.

9.9 ஒவ்வொரு வயதுப்பிரிவிலும் இறுதிப் போட்டியில் பங்குபற்றி சிறந்ததெனத் தெரிந்தெடுக்கப்படும் குழுவிற்கு முதல் பரிசும் அடுத்த குழுவிற்கு ஆறுதல் பரிசும் வழங்கப்படும்.

**10.0 விஷேட அதியுயர் திறமை எழுத்தறிவுப் போட்டி**

பதினெட்டு வயதிற்கு உட்பட்ட எவரும் இப்போட்டியில் பங்குபற்றலாம். இதற்கான வழிகாட்டி பின்னர் பரீட்சாத்திகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

போட்டி **இரண்டு பகுதிகளைக்** கொண்டதாக அமைந்திருக்கும்.
**முதல் பகுதியில் உள்ள 50 வினாக்களில், முதல்** 40 வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் நான்கு விடைகள் கொடுக்கப்படும். அவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அடையாளமிடும் படி கேட்கப்படுவர். அடுத்துள்ள 10 வினாக்கள் கோடிட்ட இடங்களை நிரப்புவனவாக அமைந்திருக்கும். போட்டியாளர்கள் கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொல்லை எழுதும்படி கேட்கப்படுவர்.
**இரண்டாவது பகுதியில்,** கொடுக்கப்படவுள்ள ஒரு தலைப்பின் கீழ் சுமார் 150 சொற்களைக் கொண்ட கட்டுரை அல்லது கடிதம் அல்லது கவிதை ஒன்றினை எழுதும்படி கேட்கப்படுவர்.

**11.0 தமிழ் குழு வினா – விடைப் போட்டி** – போதியளவு விண்ணப்பங்கள் கிடைத்தால் மட்டுமே நடைபெறும்.

- மேற்படி போட்டியில் 8 –18 வயதிற்குற்பட்டவர்கள் பங்குபற்றலாம்.
- ஒவ்வொரு குழுவிலும் அதிகபட்சமாக 5 பேர்கள் பங்குபற்றலாம்.
- கேட்கப்படும் கேள்விகள் தற்காலத் தமிழ் மொழி, மற்றும் கலாச்சாரம் சம்பந்தப்பட்டதாக இருக்கும். சில வரலாறு தொடர்பான கேள்விகளும் கேட்கப்படும். தமிழ் பரீட்சை வழிகாட்டியை பயன்படுத்தலாம்.
- சரியான பதில் அளிக்கப்பட்ட ஒவ்வொரு வினாக்களுக்கும் 1 புள்ளி வழங்கப்படும். பிழையான விடைகளுக்கு புள்ளிகள் ஏதும் கழிக்கப்படமாட்டாது.
- விடையளிப்பதற்கு முன்னர் போட்டியாளர்கள் குழுவாக தங்களுக்குள் ஆலோசிக்கலாம். ஆனால் ஒருவர் மட்டுமே 1 நிமிடத்துக்குள் பதில் அளிக்க வேண்டும்.
- ஒவ்வொரு வினாக்களுக்கும் வேறு வேறு போட்டியாளர்கள் பதிலளிக்க வேண்டும்.
- போட்டிகள் பல சுற்றுகளாக நடைபெறும்.
- நடத்துனரின் தீர்ப்பே இறுதியானது.
- போட்டியில் வெற்றி பெறும் குழுவிற்கு முதல் பரிசும் அடுத்த குழுவிற்கு ஆறுதல் பரிசும் வழங்கப்படும்.